**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
**தொலைபேசி: 044 – 22201337**
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

**ஆணை எண். 121/ந/2021**
**நாள். 27.07.2022**

திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு,
காயல்பட்டணம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், அப்பாபள்ளி தெரு, எண். 168 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு என்பவரின் 08.12.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.12.2021 அன்று பெறப்பட்டு 121/ந/2021 என்ற முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், அப்பாபள்ளி தெரு, எண். 168 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு என்பவர் தமது மனுவில்:-

"காயல்பட்டணம் பேருந்து நிலையம் வளாகத்தில் தென் மேற்கு பகுதியில் பல ஆண்டுகளாக அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. அந்த உணவகத்தில் உருவாகும் கழிவுகளை அங்கு செப்டிக் அமைத்து நகராட்சி பராமரித்து வந்தது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் துவங்கி, அம்மா உணவகம் அருகில் ஓடும் மழைநீர் வடிகாலில், கழிவுகளை நகராட்சி செலுத்திவருகிறது. இதன் காரணமாக அப்பகுதியில் துர்நாற்றமும், கொசு தொல்லையும் அதிகரித்து சுகாதார கேடு நிலவுகிறது. இதுகுறித்து காயல்பட்டணம் நகராட்சி ஆணையரிடம் அக்டோபர் 25, 2020 அன்று மனு கொடுத்து, இவ்வாறு மழைநீர் வடிகாலில் கழிவுநீரை செலுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பிறகும் அந்த செயல் நிறுத்தப்படவில்லை.

இது சம்பந்தமாக பேருந்து நிலையம் வளாகத்தினை சுற்றி வியாபாரம் செய்து வருபவர்களும் இவ்வாண்டு மே மாதம் புகார் தெரிவித்துள்ளார்கள். அதன் பிறகும் இந்த செயல் நிறுத்தப்படவில்லை.

புகார் கொடுத்து ஓர் ஆண்டு நிறைவாகி, மீண்டும் அக்டோபர் 26, 2021 அன்று இது குறித்த புகார் மாவட்ட ஆட்சியர், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மாசு காட்டுப்பாட்டு வாரியத்தின் தூத்துக்குடி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நவம்பர் 24, 2021 அன்று இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு வலியுறுத்தி கடிதம் எழுதினார். அதன்பிறகும் காயல்பட்டணம் நகராட்சி இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 161 படி இவ்வாறு மழைநீர் வடிகாலில், கழிவுநீர் செலுத்துவது குற்றமாகும். இந்த குற்றத்தை நகராட்சியே செய்வது அதிர்ச்சியளிக்கிறது.

161, "Prohibition against throwing rubbish or filth into drains. No person shall put or cause to be put any rubbish or filth into any public drain not intended for rubbish or filth or into any drain communicating with any such public drain".

எனவே, இவ்வாறு கழிவுநீரை மழைநீர் வடிகாலில் செலுத்தாமல் இருக்க நகராட்சிக்கு உத்தரவிடவும், விதிமீறி கடந்த பல மாதங்களாக கழிவுநீரை மழைநீர் வடிகாலில் செலுத்தி சுகாதார கேடு விளைவித்து வரும் நகராட்சி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய தண்டனை வழங்கும்படியும் தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 15.12.2021 நாளிட்ட கடிதம் மூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டார். மேலும் 23.02.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு 25.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

23.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:

"காயல்பட்டணம் பேருந்து நிலைய வளாகத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் உருவாகும் கழிவுகளை மேற்கண்ட உணவகத்தின் அருகில் ஓடும் மழைநீர் வடிகாலில் அவ்வுணவகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து விடுகின்றனர். அம்மா உணவகத்தை பார்த்து அருகில் உள்ள மற்ற கடைகாரர்களும் இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் துர்நாற்றமும், கொசுத் தொல்லையும் அதிகரித்து சுகாதார கேடு நிலவுகிறது. இந்நேர்வு குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி அலுவலகத்திற்கு பலமுறை புகார் மனுக்கள் அளித்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. எனவே, மேற்கண்ட அம்மா உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை செப்டிக் டேங்க் போன்ற ஒன்றை ஏற்படுத்தி அதில் சேர்த்திட உரிய நடவடிக்கை எடுத்திட நகராட்சிக்கு ஆணையிடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதுகுறித்த மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–விதிகளை மீறிய அதிகாரிகள் மீது அந்த விதிமுறைப்படி நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3) காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர், நகர்புற உள்ளாட்சி தேர்தல் வாக்குபதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை பணி உள்ளதால் 23.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராக இயலாத சூழ்நிலை உள்ளது என்றும் விசாரணைக்கு மாற்று தேதி கோரியதன் அடிப்படையில் 10.03.2022 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 10.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் மற்றும் ஓவர்சியர் இருவரும் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்பித்தனர்.

"காயல்பட்டணம் நகராட்சியில் மழை நீர் வடிகாலிலிருந்து வெளியேறும் நீர், கடலுக்கு செல்வதற்கான வழிவகை ஏற்படுத்தப்படவில்லை. காயல்பட்டணம் நகராட்சியில் UGSS திட்டம் கொண்டுவரப்படவில்லை. எனவே, அங்குள்ள வீடுகள் மற்றும் கடைகளில் சேரும் கழிவு நீரை, கழிவு நீர் தொட்டியில் சேகரித்து, அவை லாரிகள் மூலம் அப்புறப்படுத்தப்படுகின்றன. காயல்பட்டிணம் நகராட்சியில் சேரும் கழிவுநீரை அகற்றுவதற்கான நிரந்தர தீர்வு குறித்து புதிதாக பொறுப்பேற்றுள்ள நகராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் விவாதித்து நிரந்தர தீர்வு ஏற்படுத்திடவும், மேலும், நகராட்சியின் மண்டலப் பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, இது சம்பந்தமான ஒரு நிரந்தர தீர்வை காண வழிவகை செய்யப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு அம்மா உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் மழைநீர் வடிகாலில் சேர்வதை தடுக்கும்பொருட்டு, அம்மா உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரானது மழைநீர் வடிகாலில் சேர்க்கப்படாமல் தனியாக கட்டப்பட்டுள்ள கழிவு நீர் தொட்டியில் சேர்வதற்கான இணைப்பு தற்காலிகமாக நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம் " என்று தெரிவித்துள்ளார்.

4) இந்நேர்வு தொடர்பான அறிக்கையை அனுப்பக்கோரிய 15.12.2021 நாளிட்ட கடிதத்திற்கு 10.03.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை ஒன்றை சமர்பித்தார் அவ்வறிக்கையில்;

"காயல்பட்டணம் நகராட்சியில் அரசு அறிவிப்பின்படி செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரானது மழைநீர் வடிகாலில் சேர்க்கப்படாமல் தற்பொழுது தனியாக கட்டப்பட்டுள்ள கழிவுநீர் தொட்டியில் முறையாக இணைப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதற்கான புகைப்படத்தினையும் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

5) இந்நேர்வு தொடர்பாக மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் காயல்பட்டணம் பேருந்து நிலைய வளாகத்தில் இயங்கும் அம்மா உணவக கழிவுநீர், அருகில் ஓடும் மழைநீர் வடிகாலில் விடுவதாகவும் அதனால் அப்பகுதியில் துர்நாற்றம் கொசு தொல்லை போன்றவற்றால் சுகாதார சீர்கேடு நிலவுவதாகவும் 25.10.2020–ல் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரிடம் மனு கொடுத்துள்ளார். மேலும் இது சம்பந்தமாக பேருந்து நிலைய வளாகத்தினை சுற்றி வியாபாரம் செய்து வருபவர்களும் 2020 மே மாதத்தில் ஒரு மனு கொடுத்துள்ளனர். ஆனால் எந்தவித நடவடிக்கையையும் நிர்வாகம் மேற்கொள்ளவில்லை மீண்டும் 26.10.2021–ல் இதுகுறித்து மாவட்ட ஆட்சியர், மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் மனு கொடுக்கப்பட்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும்.

- மேலும் மக்கள் உரிமை நிலை நாட்டல் மற்றும் வழிகாட்டு அமைப்பு மூலம் பொதுமக்கள் பலர் கையொப்பமிட்டும் மனு கொடுக்கப்பட்டுள்ளது. மாசுகட்டுப்பாட்டு வாரிய பொறியாளாரும் தமது 24.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்க ஆணையருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இருப்பினும் எந்தவித நடவடிக்கையும் நகராட்சியில் மேற்கொள்ளாததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

- இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணையில் காயல்பட்டணம் நகராட்சியில் சேரும் கழிவுநீரை அகற்றுவதற்கான நிரந்தர தீர்வு குறித்து புதிதாக பொறுப்பேற்றுள்ள நகராட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடம் விவாதித்து நிரந்தர தீர்வு ஏற்படுத்திடவும், மேலும், நகராட்சியின் மண்டலப் பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, இது சம்பந்தமான ஒரு நிரந்தர தீர்வை காண வழிவகை செய்யப்படும் என்று தெரிவித்திருப்பது ஏற்ககூடியதாக இருந்தாலும் மனுதாரர் 25.10.2020 மனு கொடுத்து நகராட்சி நிர்வாகம் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துள்ளது தெரியவருகிறது.

- ஓராண்டிற்கு பிறகு 26.10.2021–ல் மீண்டும் மாவட்ட ஆட்சியர், மாசுகட்டுபாட்டு வாரியம் மற்றும் ஆணையர் ஆகியோரிடம் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்ததையும் அறியமுடிகிறது. பொதுமக்கள் பலரும் வந்துபோகும் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் கழிவுநீரை மழைநீர் வடிகாலில் கலக்கா வண்ணம் தற்காலிக தீர்வாக செப்டிங்டேங்க் அமைத்து பராமரித்தல் போன்ற தற்காலிக நடவடிக்கை மேற்கொள்வதோ அல்லது நிரந்தர தீர்வாக UGSS அல்லது FSTP போன்ற திட்டங்கள் மூலம் காயல்பட்டணம் நகராட்சி முழுமைக்குமே கழிவுநீர் மழைநீர் வடிகாலில் கலக்கா வண்ணம், அரசிடம் நிதிகோரி உரிய முன்மொழிவுகளை அரசிற்கு அனுப்பி வைத்து நடவடிக்கை மேற்கொண்டு இருக்கலாம். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியது நகராட்சி பொறியியல் பிரிவு ஆகும். நகராட்சி பெறியாளர் மேற்கண்ட பணியினை மேற்கொள்ளாமல் அலட்சியமாக இருந்தது விசாரணையில் அறியமுடிகிறது.

- தமது பொறுப்பை தட்டிக் கழித்து அலட்சியமாக நடந்து கொண்ட நகராட்சிப் பொறியாளர், ஓவர்சியர் மற்றும் இது தொடர்பான அதிகாரிகள் அனைவரின் மெத்தனப் போக்கும் கண்டிக்கத்தக்கதாகும். இதில் பொறுப்பை உணராமல் செயல்பட்ட நகராட்சிப் பொறியாளர், மேற்பார்வையாளர் மற்றும் கள அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் தமது வாக்குமூலத்தில் உறுதியளித்தவாறு இந்நேர்வு குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள், நகராட்சி தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து இதற்கு ஒரு நிரந்தர தீர்வை எட்டுவதற்கும், அம்மா உணவகத்தை சுற்றி சுகாதாரத்தை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு
எண். 168, அப்பாபள்ளி தெரு,
காயல்பட்டணம் 628 204.

2) நகராட்சி ஆணையர்,
காயல்பட்டணம் நகராட்சி, காயல்பட்டணம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

27/7/22

செயலாளர்.